# ஆறுமாதகால இராணுவ நடவடிக்கையினால் கொல்லப்பட்ட தமிழர் 6000; அங்கவீனம் 3000பேர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தெருப் புக்காய்ச்சல் பரவும் ஆபத்தான நிலைதோன்றியுள்ளது. பரவாமல் தடுப்பதற்கோ இவ் வியாதியைக் குணப்படுத்துவதற்கோ உரியமருந்து வகைகள் யாழ். போதனா வைத்தியசாலையில்கையிருப்பு இல்லை. ஏனைய மருத்துவ மனைகளிலும் மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. தனியார்மருந்தகங்களிலும் கடந்த ஆறு மாத காலமாக அத்தியாவசிய மருந்துகள் இடையாது-இவ்வாறு யாழ் பிரஜைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

கண் அறுவைச் சிகிச்சை, மற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்கான மருந்து வகைகள் யாழ். போதனா வைத்திய சாலையில் இல்லையென்றும், பாதுகாப்புப் படையினர் மருந்து வகைகள் யாழ்ப்பாணம் வராமல் தடை செய்வதால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இவ் விடயத்தில் உதவி வழங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 04

விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நிலாளி PEOPLES DAILY

நாதம்: 01 தை (11 - 1 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 327

## கண் பார்வையற்றோருக்கு எலக்ரோனிக் பத்திரிகை

(ஜேர்மனி)

ஜேர்மனியில் வெகு விரைவில் கண்பார்வையற்றவர்களுக்கென ஒரு எலக்ரோனிக் பத்திரிகை அவர்களின் வீடு தேடிச் செல்லவுள்ளது. அச்சிடப்பட்ட செய்தித் தாளில் வெளியாகும் செய்திகளை கம்பியூட்டரின் உதவியுடன் ஒலி வடிவில் மாற்றிக் கொடுப்பதன் மூலம் இப் பத்திரிகை உருவாக்கப்படும். மின் (4ஆம் பக்கம் பார்க்க)

புலிகளால் போரில் கைது செய்யப்பட்ட

# 43 பொலிஸார் - செஞ்சிலுவை அதிகாரிகள் நேற்று சந்திப்பு!

(நமது நிருபர்)

தமிழீழத்தில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா அரசபடைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த ஏழு மாதங்களாக இடம்பெற்ற யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 43 சிங்களப்பொலிசாரையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தனித்தனியாக நேற்றுக்காலை சந்தித்து உரையாடினர்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு யோகரத்தினம் யோகி இந்த சந்திப்புக்கான ஏற்பாட்டை ஒழுங்கு செய்திருந்தார்.

தமிழீழ விடுதலைப்போரின் போது குறிப்பிடப்பட்ட பொலிஸ்காரர்களும் சுடுபட்டிருந்தபொழுது விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டவர்கள் எனத் தெரியவருகின்றது.

இப் பொலிசாரை விடுதலைப்புலிகள் கொன்றுவிட்டதாக சிறிலங்கா அரசு தெரிவித்திருந்தது தெரிந்ததே.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வாரகால யுத்தநிறுத்தம் இன்று அறிவிக்கப்படலாம்

- இந்திய வானொலி அறிவிப்பு

(கொழும்பு)

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி, யுத்த நிறுத்தப் பிரகடனம் இன்னும் ஒரு வார காலம் நீடிக்கப்படவுள்ளது.

நேற்றிரவு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைச் சந்தித்த பதினான்கு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களில்பெரும்பான்மையினர் யுத்த நிறுத்தத்தை ஆதரித்துள்ளதாகவும் இந்திய வானொலி தனது நள்ளிரவுச் செய்தியில் தெரிவித்தது.

மேலும் ஒருவார காலத்திற்கு போர் நிறுத்தம் நீடிக்கப்படலாமென்பதை கொழும்பின் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலியும் உறுதிப்படுத்தியது. அதே வேளை ஒருதலைப் பட்சமாக விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தத்தைத் தொடர்ந்தும் நீடித்துப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படல் வேண்டும் என்பதில் கொழும்பு அக்கறையாக இருப்பதாக பி.பி.ஸி. கோடிகாட்டியுள்ளது. அதேவேளை போர்நிறுத்தத்திற்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டுமென எதிர்கட்சிகள் அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வருவதாகத் தெரிகிறது.

## மத்திய அரசுடன் மோதுவதை தமிழக அரசு தவிர்க்கவேண்டும்

- சந்திரசேகர் எச்சரிக்கை

(டில்லி)

மத்திய அரசுடன் மோதுவதைத் தவிர்க்க வேண்டும் என்று பிரதம மந்திரி சந்திரசேகர் தமிழ்நாட்டு அரசிற்கு எச்சரிக்கை செய்துள்ளார். விடுதலைப் புலிகள் நடவடிக்கை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே அபாயகரமானதென்றும், அது சகித்துக் கொள்ள முடியாததொன்று என்றும் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்ற மக்கள் அவையில் விடுதலைப் புலிகள் நடவடிக்கை பற்றி திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்து இந்திய அண்ணா

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைத்தமிழர் பிரச்சினையில்

## மத்திய அரசுடன் எப்போதும் ஒத்துழைத்தே வந்துள்ளோம்

- கருணாநிதி

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் எப்போதும் மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைத்தே வந்துள்ளது என தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருச்சியில் இடம்பெற்ற பொதுக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஆலோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தம் குறித்து மீண்டும் ஆலோசனை நடத்தியுள்ளதாக ஆறு எதிர்க் கட்சிகள் அறிவித்துள்ளன.

சர்வகட்சி மகாநாட்டில் பங்கு பற்றும் எதிரணி அரசியல் கட்சிகள் ஆறு நேற்று முன்தினம் மக்கள் கட்சித்

(4ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா அரசாங்கத்தால்

## வழங்கப்பட்ட ஆயுதங்களை ஒப்படைக்க கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் கட்சிகளுக்கும் சில குழுக்களுக்கும் வழங்கப்பட்ட ஆயுதங்களை அரசாங்கத்திடம்திருப்பிஒப்படைக்குமாறு சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ள அறிக்கை ஒன்றில் இவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை பற்றிய மதிப்பீடு

(4ஆம் பக்கம் பார்க்க)

அரசியற்கட்சி பிரமுகர்கள்

## பாதுகாப்புச் செலவீடு 50 வீதத்தினால் குறைப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகள் தளர்த்தப்படவுள்ளன தென்னிலங்கையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்ட ஆளணியினரை ஐம்பது வீதமாகக் குறைக்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுக் கொழும்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

மேற்படி பாதுகாப்புச் செல

(4ஆம் பக்கம் பார்க்க)

ஓய்வூதியக்காரருக்கு

## கிராமிய வங்கியில் பணமாக ஒரு மாதக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராமிய வங்கி ஓய்வூதியக்காரர்களுக்குரிய ஒரு மாதத்திற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கின்றன.

கப்பலில் எடுத்துவரப்பட்ட பணத்தில் கிராமிய வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட பத்து மில்லியன் ரூபாவும் இக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்பட இருக்கின்றபோதிலும் ஒரு மாதத்திற்குரிய கொடுப்பனவுகளுக்கு சுமார் பன்னிரண்டு மில்லியன் ரூபா தேவைப்படும் என்பதால் மேற்படி ஒதுக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிக செலவீட்டால் இலவசபுத்தகங்கள் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைச் சிறார்களுக்கான பாடநூல்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவருவதில் தாமதம் ஏற்படலாம். லொறி ஒன்றில் பாடநூல்களை யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு லொறிக் கூலியாக சுமார் ரூபா 15,000 மட்டும்தான் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இலவசப் பாடநூல்களை ஏற்றிப் பறிக்க ரூபா 85,000 வரை லொறி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வெளிவந்துவிட்டது

வர்த்தகமும் நிதியும் - உயர்தர வகுப்புகளுக்குரியது. உள் நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடையநிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியவற்றுடன் வெளிவந்து விட்டது. தொகுப்பு; தேவராஜன் ஜெயராமன் B Com (Hons) விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B/1804)

### விற்பனைக்கு

நீம் சுகாதாரதூபம் பாவித்து நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை பெறுங்கள். ஒலிவ் ஸ்நானப்பவுடர் எண்ணெய்த் தோய்ச்சலுக்கு முந்தையோர் கண்ட முறையில் தயாரானது. பக்கெற் ஒன்று ரூபா 1-25. 25 பக்கெற் கொண்ட காட் ரூபா 25-00 மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(B-1846

### காணவில்லை

Brown நிற பொமனேரியன் நாயை 7 ஆம் திகதி முதல் காணவில்லை. அது பற்றிய விபரம் தெரிந்தவர்கள் தயவு செய்து பாலா, இல 6 சங்கிலியன்வீதி, நல்லூர் எனும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

(R/1020)

### தேவை

இலுப்பைப் பிண்ணாக்கு (அரப்பு) தேவைப்படுகிறது. மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(B/1845)

### ஆங்கில வகுப்புகள்

சொழும்பு, வத்தளை, குருநாகல், மட்டுநகர், பிரபல ஆசிரியர் சேரி ஆனந்தன் மூன்று பாடநெறிகளை உடன் ஆரம்பிக்கிறார். By-pass To Mastery of English PART II, Spoken English with Lingual Training, G.C E வினா விடை வகுப்புக்கள், ஞானபண்டித வைத்தியசாலை குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.

(R-1008)

### வீதி திருத்தம்

பல வருடகாலமாக திருத்தப் படாதிருந்த கைதடி வடக்குவீதி தற்போது திருத்தப்பட்டு வருகிறது. இந்த வீதியைப் பொது மக்களின் உதவியுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் திருத்தஞ் செய்து வருகின்றனர்;

இதேசமயம் தென்மராட்சிப் பகுதியில் பாழடைந்த பல வீதிகளும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் திருத்தப்பட்டுவருகிறது. (மு)

### சுதேச வைத்திய கருத்தரங்கு

சுதேசவைத்தியம், மூலிகை வகைகள் சம்பந்தமான கருத்தரங்கொன்று இன்று வியாழக்கிழமை காலை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகின்றது.

விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பொறுப்பாளர் திரு. விஜயராஜா இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

(49)

---

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991-01-13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ள தென்பதை சகல பழைய மாணவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

சி. கனகசபாபதி
செயலாளர்.

(B/1013)

---

யாழ்ப்பாண மாவட்ட தேசிய பாடசாலைகள்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
வேம்படி மகளிர் கல்லூரி

### ஆண்டு – 6 அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை – 1991.

01. இப் பரீட்சை பெப்ரவரி மாதத்தில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

02. தற்போது ஆண்டு 5இல் கல்வி கற்கும் மாணவர்களும், 01 02. 1980 ஆம் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.

03 பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை பிரவேசம் பெற விரும்பும் கல்லூரி அலுவலகத்தில் கட்டணமாக ரூபா முப்பது (30/-) செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், பிரவேசம்பெற விரும்பும் கல்லூரியில் நேரில் 30 01. 1991 புதன்கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 30. 01. 1991 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. இடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் நேரில் பெற்றுக்கொள்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செல்வி இ. இராஜரத்தினம்
அதிபர்,
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

க. சி குகதாசன்
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

B. 1847)

---

தமிழீழ ஆய்வு நிறுவனம்

## கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நெல் வயல்களில் அல்லது ஏனைய தோட்டங்களில் பயிர்களை மேயும் கால்நடைகள் கட்டாக் காலியாக பொது இடங்களில் உலாவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி கிராமிய உதவிக் குழுவில் இருந்து கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கென ஐந்துபேர் தெரியப்படுவர் எனவும் தோட்டக்காரர்களாலோ, கால்நடை பிடிப்பாளராலோ கால்நடைகள் பிடிக்கப்படலாம் எனவும் பிடிக்கப்பட்டவை தெரிவு செய்யப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிடிக்கப்பட்ட கால்நடைகள் பகிரங்கமாக அமைக்கப்பட்ட பராமரிப்பு இடத்தில் வைத்து பராமரிக்கப்படும் என்றும் நாளாந்த பராமரிப்பிற்காக மாடு ஒன்றிற்கு 10 ரூபாவும் ஆடு ஒன்றிற்கு 5 ரூபாவும் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கால் நடைகளின் சொந்தக்காரர்களுக்கு குழுவின் செயலாளர் விபரத்தை அறிவிப்பார், கால்நடையால் ஏற்பட்ட சேதப்பெறுமதி, கால்நடை பிடிபட்ட இரண்டு நாட்களுள் உரியவரிடம் பெற்று கால்நடை கையளிக்கப்படும். குற்றப்பணம் மாடு ஒன்றிற்கு 50 ரூபாவும், ஆடு ஒன்றிற்கு 25 ரூபாவும், பிடி

## விடியல்வரை தொடருமா...?

எங்கள் இரவுகள்
மட்டுமல்ல
பகல்களும்
இருண்டு போயின
பதுங்கு குழிகளுக்குள்...
இரவின் நிசப்தங்களைக்
கலைக்கும் ஷெல்கள்
அதிர்வுகளுடன்...
முற்றத்துப் பனையின்
காவோலை கூட
ஒரு கணம் மௌனிக்கும்!
துயரங்களைச் சுமந்து
கழியும் நாட்கள்...
தொடரும்
விடியல் வரைக்கும்!
எங்கள் பூமரங்களில்
வைகறையில் மலர்வதற்காகக்
காத்திருந்த மொட்டுக்கள்
மலரும் முன்பே
பிய்க்கப் பட்டன...
எமது நெஞ்சங்களில்
குருதி சிந்திய
யுலையும்

---

## நினைவு கூருகின்றோம்

## தை 11

1987ஆம் ஆண்டில் வீரமரணமடைந்த

**லிண்டன்** (ம. குலசேப்பிள்ளை - அடம்பன்)

# கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நெல் வயல்களில் அல்லது ஏனைய தோட்டங்களில் பயிர்களை மேயும் கால்நடைகள் கட்டாக் காலியாக பொது இடங்களில் உலாவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி கிராமிய உற்பத்திக் குழுவில் இருந்து கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கென ஐந்துபேர் தெரியப்படுவர் எனவும் தோட்டக்காரர்களாலோ, கால்நடை பிடிப்பாளராலோ கால்நடைகள் பிடிக்கப்படலாம் எனவும் பிடிக்கப்பட்டவை தெரிவு செய்யப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிடிக்கப்பட்ட கால்நடைகள் பகிரங்கமாக அமைக்கப்பட்ட பராமரிப்பு இடத்தில் வைத்து பராமரிக்கப்படும் என்றும் நாளாந்த பராமரிப்பிற்காக மாடு ஒன்றிற்கு 10 ரூபாவும் ஆடு ஒன்றிற்கு 5 ரூபாவும் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கால்நடைகளின் சொந்தக்காரர்களுக்கு குழுவின் செயலாளர் விபரத்தை அறிவிப்பார், கால்நடையால் ஏற்பட்ட சேதப்பெறுமதி, கால்நடை பிடிபட்ட இரண்டு நாட்களுள் உரியவரிடம் பெற்று கால்நடை கையளிக்கப்படும். குற்றப்பணம் மாடு ஒன்றிற்கு 50 ரூபாவும், ஆடு ஒன்றிற்கு 25 ரூபாவும், பிடிகாரருக்கு ஒரு மாட்டிற்கு 50 ரூபாவும் ஓர் ஆட்டுக்கு 25ரூபாவும் கூலியாகச் செலுத்தப்பட வேண்டும். சேத மதிப்பீடு குறித்து குழு தீர்மானம் மேற்கொள்ளும்.

இரண்டு நாட்களுள் உரியவர் தொடர்புபெற முடியாவிடின் அதன் நிறம், குறி, வயது, பால் ஆகிய விபரங்களுடன் பிரசித்த அறிவிப்பு செய்யப்படும் என்றும், அறிவிப்பின் பின்னரும் உரியவர் அறியப்படாவிடின் பத்துநாட்களின்பின் பகிரங்க ஏலத்தில் அந்தக் கால்நடைகள் விற்கப்படும். ஏலத்தின் மூலம் பெறப்படும் பணத்தில் செலவு கழிய மீதம் தமிழீழ ஆய்வு நிறுவனத்துக்குச் சேரும்.

இன்றைய இந்தச் சூழ்நிலையில் ஒவ்வொரு பயிரும் பெறுமதி மிக்கவை. ஆகையால் கால்நடைகளைக் கட்டாக்காலியாகத் திரிய விடாது உற்பத்தி வளத்தைக் காப்பாற்ற ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் எனவும் தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

## விடியல்வரை தொடருமா…?

எங்கள் இரவுகள்
மட்டுமல்ல
பகல்களும்
இருண்டு போயின
பதுங்கு குழிகளுக்குள்…
இரவின் நிசப்தங்களைக்
கலைக்கும் ஷெல்கள்
அதிர்வுகளுடன்…
முற்றத்துப் பனையின்
காவோலை கூட
ஒரு கணம் மௌனிக்கும்!
துயரங்களைச் சுமந்து
கழியும் நாட்கள்…
தொடரும்
விடியல் வரைக்கும்!
எங்கள் பூமரங்களில்
வைகறையில் மலர்வதற்காகக்
காத்திருந்த மொட்டுக்கள்
மலரும் முன்பே
பிய்க்கப் பட்டன…
எமது நெஞ்சங்களில்
குருதி சிந்திய
யூலையும்
இருண்டு போன
ஒக்டோபரும்
துன்பங்கள் தொடர்ந்த
யூனும்
நெருடும் நினைவுகளாய்
என்றும்
நிலைத்து நிற்கும்!
துயரங்கள்…
ஏக்கங்கள்…
நம்பிக்கைகளுடன்
புழுதி படிந்த
இந்த மண்ணும்…
கடலும்…
காற்றும்…
எமதென்ற இறுமாப்பில்
நாங்கள்…
ஆனாலும்
இன்னும் சிலர்
தாங்கள் மட்டும்
அந்நியமாய்
முத்திரைச் சந்தியில்
முடிச்சுக்களுடன்…
அகதி
அந்தஸ்திற்காக
தினம் தினம்
விமான நிலைய
வழியனுப்பல்கள்…
விடியல் வரை
இதுவும் தொடருமா…?

-நாமகன்

தோற்றத் தகுதியுடையவர்களாவர்.

03 பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை பிரவேசம் பெற விரும்பும் கல்லூரி அலுவலகத்தில் கட்டணமாக ரூபா முப்பது (30/-) செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், பிரவேசம்பெற விரும்பும் கல்லூரியில் நேரில் 30. 01. 1991 புதன்கிழமைக்கு முன்னதாகக் கையளிக்கப்படல் வேண்டும். 30. 01. 1991 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. இடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் நேரில் பெற்றுக்கொள்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செல்வி இ. இராஜரத்தினம்
அதிபர்,
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

க. சி குகதாசன்
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்
கல்லூரி, யாழ்ப்பாணம்.

B. 1847)

## நினைவு கூருகின்றோம்

## தை 11

1987ஆம் ஆண்டில் வீரமரணமடைந்த

**லிண்டன்** (ம. குசைப்பிள்ளை - அடம்பன்)

1990ஆம் ஆண்டில் வீரமரணமடைந்த

**மேஜர் சோதியா** (மை. வசந்தி - கரவெட்டி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

பகைதகைக்கும் தமிழ்வாழ்வு பாரினிலே உயருமட்டும்
புதைகுழிகள் புதுப்புதுவாய் தோன்றும் -சிதைநெருப்பு
தேச விடுதலையைத் தேடுமட்டும் கனன்றெரியும்
நாசந்தான் எதிரிகளை நாடும்!

★ ★ ★

வெடிகுண்டும் கடுகலனும் வெஞ்சமரும் வேதனையும்
விடியலுக்கு ஒன்றும் புதியதல்ல - துடிப்புடனே
தளைப்பதற்காய்த் தானைகண்ட தமிழ்ப்புலிகள் நாமிங்கு
இளைப்போமோ இழப்புகளைக் கண்டு?

★ ★ ★

சந்தி தெருவெங்கும் சதிராடும் எம்மிளைஞர்
வந்து புலியாக இணைந்திட்டால் - விந்தையிகு
நாடுநமக் காகாதோ நாய்நரிகள் ஓடாதோ
வாடுமினம் மீளாதோ வா!

★ ★ ★

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B-1834)

## சிந்தனைக்கு

அறிவு, வாய்மையை மட்டும்
ஆதாரமாகக் கொண்டதல்ல;
தவறையும் ஆதாரமாகக் கொண்டதுதான்.
— கார்ல் கஸ்தாங் ஜங்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்; 11-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

## புத்திமான் பலவான்

வளைகுடா தொடர்பாக அமெரிக்காவிற்கும் ஈராக்கிற்கும் இடையில் நடந்த உளவியல் ரீதியான யுத்தம் நேற்று முன்தினம் அமெரிக்க வெளியுறவுச் செயலாளருக்கும், ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஸிசிற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையுடன் முடிவடைந்துவிட்டது என்றே கொள்ளலாம். அதேவேளை இந்தப் போரில் அமெரிக்காவை ஈராக் வென்றுவிட்டது என்றும் சொல்லலாம்.

ஈராக் குவைத்தை கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் தன்னுடன் இணைத்துக் கொண்டதன் பின்னர் அமெரிக்காவும், நேச அணிகளும் வளைகுடாப் பகுதியில் தமது இராணுவபலத்தை அதிகரித்துக் கொண்டும் யுத்த ஒத்திகையில் ஈடுபடுத்திக் கொண்டும் இருந்ததோடு அவற்றின் மூலம் ஈராக்கை உளவியல் ரீதியில் பலவீனப் படுத்தும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டன. இதனால் அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளின் இராணுவ வலிமையும் பெரிதாக வெளிக்காட்டப்பட்டன.

இந்த உளவியல் ரீதியான போரின் உச்சக்கட்டமாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கரின் ஜெனிவா விஜயம் அமைந்தது. பேக்கர் ஜெனிவா புறப்படும்போதே அவரின் பிரயாணத்திற்கு மிகவும் முக்கியம் கொடுக்கப்பட்டது இந்தப் பயணத்தைப் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவிக்கையில் ஈராக்குடன் பேச்சுவார்த்தைநடத்த பேக்கர்செல்லவில்லை; ஈராக்கிற்கான இறுதி எச்சரிக்கையை மட்டுமே கொண்டு செல்கின்றார். அது ஜனவரி 15க்குள் ஈராக் குவைத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்பதேயாகும் எனத் தெரிவித்தார் இதனை வலியுறுத்துவதுபோல் பேக்கரும் வளைகுடாவில் தம்முடன் அணிதிரண்டுள்ள நட்பு நாடுகளுக்குச் சென்றுவிட்டு ஜெனிவா சென்றடைந்தார். அங்கு சென்ற பின்பும் பேக்கர் தனது எச்சரிக்கையைக் கைவிடவில்லை.

ஆனால், வளைகுடா நெருக்கடி தொடங்கியதில்இருந்து ஈராக் ஒருபோதும் அமெரிக்காவின் மிரட்டலுக்குப்பணிந்து போய்விடவில்லை; அதேவேளை அமெரிக்காவையும், அதன் கூட்டாளிகளையும் மிரட்டியதோடு அதில் ஓரளவு வெற்றியும் ஈராக் பெற்றுவிட்டது. தமது மிரட்டலுக்கு இரசாயன ஆயுதங்களை மூலாதாரமாகக் கொண்டார் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுஸைன்.

ஈராக் வெளியேற வேண்டும் அல்லது போர்தான் முடிவு என தெரிவிக்க வந்திருந்த ஜேம்ஸ் பேக்கரைச் சந்திக்க ஜெனிவா சென்ற ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸிஸ் ஈராக் ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் இருப்பதாகக் காட்டிக் கொள்ளவோ அல்லது பேச்சுவார்த்தையில்பெரியஆர்வம் உள்ளதாகவோ காட்டிக் கொள்ளவில்லை ஜெனிவா விமானநிலையத்தில் இறங்கிய தாரிக் அஸிஸ் ஜெனிவாவின் இயற்கை எழிலைப் பற்றியும் தான் அங்கு வந்ததையிட்டு தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் வெளியிட்டார். இது அமெரிக்காவிற்கு பெரும்ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதேபோலவு, ஏழு மணி நேரம் நீடித்த பேச்சு



மேஜர் சோதியா

## இவர்களின் பாதையில்

பெற்றவள். களத்தில் தொலைத் தொடர்பாளராக -வும், காயமடைந்த சக போராளிகளுக்கு மருத்துவம் செய்பவராகவும் கடமையாற் றினான் அவள் பாசறை முழு வதற்கும் மருத்துவராகவும் இருந்தவள் என்பது குறிப்பி டத்தக்கது.

மருத்துவராகவும்தொலைத் தொடர்பாளராகவும் மட்டு மல்லாமல் போர்க்களத்தில் வீரத்துடன் எதிரிப் படையை

தேசவிடுதலையோடு பெண் விடுதலையும் கிடைத்துவிட வேண்டும் என்ற முனைப்பில் தன் உடல் நிலையைச் சிறிது கவனிக்காது ஓய்வு ஒழிச்ச லின்றி உழைத்துக் கொண்டி ருந்த அவளை துரத்தி அடிக்க முடியாத எதிரியாக வந்த நோய்விபசகாவு கொண்டது. அவள் சாதிக்க நினைத்த சாத னைகளை யா வென்றெடுக்க நினைத்த போராட்டத் தையோ நாம் மறந்து விட

# எங்கள் இலட்சியப்பயணம் தொடரும்

பெண்களின் ஆளுமையைச் சரியாகத் தெரிந்து கொள்ளத் தொடங்கி விட்ட சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சொல்லால் அல்ல எமது தீரச்செயல்களால் பெண்களுள்ளே மறைந்து கிடக்கின்ற ஆற்றலை புரியவைப்பதனூடாக பெண்களின் தனித்துவத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றோம். தேசிய ரீதியான அடக்கு முறையால் மட்டுமல்லாமல்சமூகரீதியான ஒடுக்கு முறைக்குள்ளும் அகப்பட்டு அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்ற பெண்களின் விடுதலைக்காக குரல் எழுப்புவதோடு நின்று விடாமல்எமது விடுதலையை வென்றெடுக்க நாம் தான் போராட வேண்டும் என்பதில் உறுதியாக நின்று போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எமது தேசம் விடுதலை அடையும் போது பெண்களும் தமது அடக்குமுறைக்குள்ளிருந்து விடுபடுவார்கள் என்பதைத் திடமாக நம்புகின்றது எமது அமைப்பு. உதிரியாக அல்ல; பலமான ஓர் அமைப்பாக பெண்கள் இணைந்தால் தான் வெற்றியின் பாதையில் சுலபமாக நகர்த்தப்படுவோம் என்பதை சரியாகப் புரிந்து கொண்டதைத் தொடர்ந்து 1985ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புஉருவாக்கப்பட்டது. தமிழ்ப்பெண்களை பொறுத்தவரை மட்டுமல்லாமல் சகல அடக்குமுறைகளாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் பெண்களையும் உறுதியுடனும் துணிவுடனும் நிமிர்ந்து நிற்க வைத்த ஆண்டு தான் 1986ஆம் ஆண்டு. போர்க்களத்தில் விடுதலைப் புலிகள் மகளிர்படை தன்வீரத்தை, விடுதலை உணர்வை, ஆற்றலை வெளிப்படுத்திய ஆண்டு அது. அன்று தொடங்கிய ஆளுமையை வெளிப்படுத்தும் நிகழ்வு தனித்துவத்தை நிலை நாட்டும் உறுதி

விரட்டி அடிக்கும் உரமான உள்ளம் கொண்டவள் சோதியா என்பதை நிரூபிக்க அவள் பங்குபற்றிய தாக்குதல் களங்களை குறிப்பிடலாம் 1986ஆம் ஆண்டுஐப்பசி 12ஆம் திகதி லெப். கேணல் விக்டர் தலைமையில் அடம்பனில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல், யாழ். தொலைத் தொடர்பு நிலையத்தில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு, கோப்பாயில் இந்திய இராணுவத்தின் கவசவாகனத் தொடர் அணியினருடன் நடந்த மோதல், கல்லுண்டாயில் நடைபெற்ற இந்திய இராணுவத்திற்கெதிரான தாக்குதல் சித்தன் கேணியில் இந்திய ஆக்கிரமிப்புப்படையின் டாங்கியை நிர்மூலமாக்கிய தாக்குதல், முல்லைத்தீவு பனைமாற்றுப் பகுதியில் இந்திய இராணுவத்தினருடனும் சிறிலங்கா இராணுவத்தினருடனும் நடைபெற்ற தாக்குதல்கள் என்று தொடர்ந்து கொண்டே போகலாம்.

மாட்டோம் அதற்காக உழைப்போம் என்ற நம்பிக்கையுடன் அவள் தன் விழிகளை மூடிக் கொண்டாள்;

எமது போராட்டத்தில் மரணிக்கும் ஒவ்வொரு போராளியும் தனித்துவமானவர்கள். அவர்கள் ஒவ்வொருவரின் இழப்பும் ஈடு செய்ய முடியாதது. அந்த வகையில் மகளிர் படையின் பரிணாம வளர்ச்சியில் தனது செயற்பாடுகளூடாக படிப்படியாக தலைமைத்துவப் பண்புகளை அடைந்து கொண்டு சரியான முறையில் எமது மகளிர் படையை வழிநடத்திய சோதியாவின் இழப்பும் ஈடு செய்ய முடியாதது.

"எந்த நோக்கில் எமது விடுதலை இயக்கம் தோற்றம் பெற்றதோ அந்தநோக்கத்தை நாம் நிறைவேற்றி வைப்போம்." என்ற நம்பிக்கையுடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட எமது போராளிகளின் கனவை நனவாக்குவோம் என்று உறுதி எடுத்துக்கொள்வோம்.

## கிழக்கு மாணவர்களுக்கு உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உலர் உணவு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலக அபிவிருத்தி சேவைகள் பிரிவு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக இந்த உணவுப் பொருள் விநியோகத்தை மேற்கொள்ள இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 190 மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் பயின்று வருகின்றனர். இவர்கள் தமது பெற்றோருடன் தொடர்புகள் அற்ற நிலையில் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

(க)

## தபால் விநியோகம் இல்லை

(வவுனியா)

வவுனியாவில் பிரதம தபாலகம் செயல்படுகின்ற போதிலும் நகரப் பகுதி தவிர்ந்த ...

...களுக்கான தபால் விநியோகம் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படுத்தும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டன. இதனால் அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளின் இராணுவ வலிமையும் பெரிதாக வெளிக்காட்டப்பட்டன.

இந்த உளவியல் ரீதியான போரின் உச்சக்கட்டமாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கரின் ஜெனிவா விஜயம் அமைந்தது. பேக்கர் ஜெனிவா புறப்படும்போதே அவரின் பிரயாணத்திற்கு மிகவும் முக்கியம் கொடுக்கப்பட்டது இந்தப் பயணத்தைப் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவிக்கையில் ஈராக்குடன் பேச்சுவார்த்தைநடத்த பேக்கர்செல்லவில்லை; ஈராக்கிற்கான இறுதி எச்சரிக்கையை மட்டுமே கொண்டு செல்கின்றார். அது ஜனவரி 15க்குள் ஈராக் குவைத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்பதேயாகும் எனத் தெரிவித்தார் இதனை வலியுறுத்துவதுபோல் பேக்கரும் வளைகுடாவில் தம்முடன் அணிதிரண்டுள்ள நட்பு நாடுகளுக்குச் சென்றுவிட்டு ஜெனிவா சென்றடைந்தார். அங்கு சென்ற பின்பும் பேக்கர் தனது எச்சரிக்கையைக் கைவிடவில்லை.

ஆனால், வளைகுடா நெருக்கடி தொடங்கியதில்இருந்து ஈராக் ஒருபோதும் அமெரிக்காவின் மிரட்டலுக்குப்பணிந்து போய்விடவில்லை; அதேவேளை அமெரிக்காவையும், அதன் கூட்டாளிகளையும் மிரட்டியதோடு அதில் ஓரளவு வெற்றியும் ஈராக் பெற்று விட்டது. தமது மிரட்டலுக்கு இரசாயன ஆயுதங்களை மூலாதாரமாகக் கொண்டார் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன்.

ஈராக் வெளியேற வேண்டும் அல்லது போர்தான் முடிவு என தெரிவிக்க வந்திருந்த ஜேம்ஸ் பேக்கரைச் சந்திக்க ஜெனிவா சென்ற ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸிஸ் ஈராக் ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் இருப்பதாகக் காட்டிக் கொள்ளவோ அல்லது பேச்சுவார்த்தையில்பெரியஆர்வம் உள்ளதாகவோ காட்டிக் கொள்ளவில்லை ஜெனிவா விமானநிலையத்தில் இறங்கிய தாரிக் அஸிஸ் ஜெனிவாவின் இயற்கை எழிலைப் பற்றியும் தான் அங்கு வந்ததையிட்டு தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் வெளியிட்டார். இது அமெரிக்காவிற்கு பெரும்ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதேபோலவே, ஏழு மணி நேரம் நீடித்த பேச்சுவார்த்தையில் ஜனவரி மாத காலக்கெடு பற்றி ஒரு பேச்சுத்தானும் ஈராக்கால் எடுக்கப்படவில்லை. இதனால் போரைப் பற்றி ஈராக் கவலைப்படவில்லை என்பதுபோல் நடந்து கொண்டார். அடுத்ததாக இறுதிச் செய்தியை வழங்க வந்த ஜேம்ஸ் பேக்கர் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் 15 நிமிடங்களுக்கு மேல் தொலைபேசியில் உரையாட வைக்குமளவிற்கு அஸிஸ் பேக்கரைக் குழப்பிவிட்டார்.

இந்தநிலையானது இதுவரையிலான அமெரிக்காவின் உளவியல் போரில் அமெரிக்கா தோற்றுவிட்டது என்பதையே காட்டியது. இந்தநிலை அமெரிக்காவிற்கு பெரும் தர்ம சங்கடத்தைத் தோற்றுவித்துள்ளது என்றே சொல்லலாம்.

அதேவேளை, ஈராக்கின் உளவியல்போர் வளைகுடாவில் உள்ள அமெரிக்க படைகளையும் நேசஅணிப்படைகளையும் ஓரளவு குழப்பியுள்ளது என்பதும் உண்மை. எடுத்துக்காட்டாக சவுதி அரேபியாவிற்கு விஜயம் செய்த பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் வளைகுடாவில் அணுவாயுதப்போர் நடைபெறாது என தமது வீரர்களுக்கு தென்பூட்ட வேண்டிய நிலையில் இருந்தார் என்பது குறிப்பிடக் கூடியதாகும்.

உளவியல் போரில் தோல்வியடைந்த அமெரிக்கா அடுத்த கட்ட நடவடிக்கையான ஈராக் மீதான போரை தான் கூறியபடி பதினைந்தாம் திகதி ஆரம்பிக்குமா? என்பதிலும் இன்று சந்தேகமே நிலவுகின்றது. இதற்கு பிரிட்டனில் எழுந்துள்ள எதிர்ப்பும், அமெரிக்க காங்கிரசின் எதிர்ப்பும் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் விருப்பமின்மையும் போன்ற பல காரணிகள் தடையாகவுள்ளன.

இந்த நிலையில், ஐ. நா. காரியதரிசி பெரஸ்டிகுயிலரின் சமாதான முயற்சியும், பிரெஞ்சு அதிபரின் முயற்சியும் பதினைந்தாம் திகதி வளைகுடாவில் போர் ஆரம்பமாகாது என்பதை வெளியிடும் சமிக்ஞைகளாக இருப்பதோடு, அமெரிக்காவிற்கும் சில வாய்ப்புக்களை வழங்கியுள்ளது:

---

மட்டுமல்லாமல்சமூகரீதியான ஒடுக்குமுறைகளுக்குள்ளும் அகப்பட்டு அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்ற பெண்களின் விடுதலைக்காக குரல் எழுப்புவதோடு நின்றுவிடாமல்எமது விடுதலையை வென்றெடுக்க நாம் தான் போராட வேண்டும் என்பதில் உறுதியாக நின்று போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எமது தேசம் விடுதலை அடையும் போது பெண்களும் தமது அடக்குமுறைக்குள்ளிருந்து விடுபடுவார்கள் என்பதைத் திடமாக நம்புகின்றது எமது அமைப்பு. உதிரியாக அல்ல; பலமான ஓர் அமைப்பாக பெண்கள் இணைந்தால்தான் வெற்றியின் பாதையில் பலமாக நகர்த்தப்படுவோம் என்பதை சரியாகப் புரிந்து கொண்டதைத் தொடர்ந்து 1985ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புஉருவாக்கப்பட்டது. தமிழ்ப்பெண்களை பொறுத்தவரை மட்டுமல்லாமல் சகல அடக்குமுறைகளாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் பெண்களையும் உறுதியுடனும் துணிவுடனும் நிமிர்ந்து நிற்க வைத்த ஆண்டு தான் 1986ஆம் ஆண்டு. போர்க்களத்தில் விடுதலைப் புலிகள் மகளிர்படை தன்வீரத்தை, விடுதலை உணர்வை, ஆற்றலை வெளிப்படுத்திய ஆண்டு அது. அன்று தொடங்கிய ஆளுமையை வெளிப்படுத்தும் நிகழ்வு தனித்துவத்தை நிலை நாட்டும் உறுதி இன்று மேலும் பலபடி முன்னேறிவிட்டது. எண்ணில்லாத பெண்களை இன்று எமது அமைப்பு உள்வாங்கிக் கொண்டு வருகின்றது.

இந்த முன்னேற்றகரமான செயற்பாட்டின் ஆணிவேரில் அத்திவாரக் கற்களில் ஒருத்தி தான் மேஜர் சோதியா.

முதன் முதலில் மகளிர் படைப்பிரிவில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சரியான பாதையில் மகளிர் அமைப்பை வழிநடத்தியதன் மூலம் நிர்வகிப்பதற்கும் தலைமை வகிப்பதற்கும் பெண்களும்தகுதியானவர்கள் தான் என்பதை நிரூபித்துக் காட்டியவள். தேசிய விடுதலைப் போராட்டத்துள் தம்மை இணைத்துக்கொண்ட போராளிகள் மனங்களில் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் பெண்விடுதலைப் போராட்டமும் நிகழ வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பதிய வைத்தவள் மேஜர் சோதியா.

பெண்களால் எதனையும் திறம்படச் செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவள் அவள். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது பெண்கள் பயிற்சி முகாமில் இராணுவப் பயிற்சி பெற்றதோடு நின்றுவிடாமல் தொலைத்தொடர்பு, மருத்துவத் துறைகளிலும் பயிற்சி

---

லங்கா இராணுவ முகாம் தகர்ப்பு, கோப்பாயில் இந்திய இராணுவத்தின் கவச வாகனத் தொடர் அணியினருடன் நடந்த மோதல், கல்லுண்டாயில் நடைபெற்ற இந்திய இராணுவத்திற்கெதிரான தாக்குதல் சித்தன் கேணியில் இந்திய ஆக்கிரமிப்புப்படையின் டாங்கியை நிர்மூலமாக்கிய தாக்குதல், முல்லைத்தீவு மணலாற்றுப் பகுதியில் இந்திய இராணுவத்தினருடனும் சிறிலங்கா இராணுவத்தினருடனும் நடைபெற்ற தாக்குதல்கள் என்று தொடர்ந்து கொண்டே போகலாம்.

டாக படிப்படியாக தலைமைத்துவப் பண்புகளை அடைந்து கொண்டு சரியான முறையில எமது மகளிர் படையை வழிநடத்திய சோதியாவின இழப்பும் ஈடு செய்ய முடியாதது.

''எந்த நோக்கில் எமது விடுதலை இயக்கம் தோற்றம் பெற்றதோ அந்தநோக்கத்தை நாம் நிறைவேற்றி வைப்போம்.'' என்ற நம்பிக்கையுடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட எமது போராளிகளின் கனவை நனவாக்குவோம் என்று உறுதி எடுத்துக்கொள்வோம்.

---

# கிழக்கு மாணவர்களுக்கு உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உலர் உணவு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக இந்த உணவுப் பொருள் விநியோகத்தை மேற்கொள்ள இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 190 மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் பயின்று வருகின்றனர். இவர்கள் தமது பெற்றோருடன் தொடர்புகள் அற்ற நிலையில் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

(க)

# தபால் விநியோகம் இல்லை

(வவுனியா)

வவுனியாவில் பிரதம தபாலகம் செயல்படுகின்ற போதிலும் நகரப் பகுதி தவிர்ந்த மற்றைய இடங்களில் தபால் விநியோகம் இடம் பெறுவதில்லை.

இதன் காரணமாக வவுனியா கிராமப்புற மக்கள் கடிதப் பரிமாற்றத்திற்காக பெரிதும் கஷ்டமடைவதை அவதானிக்க முடிகிறது.

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியா கிராமப் புறங்களுக்கான தபால் விநியோகம் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தவிர, கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியாவில் உள்ள உப தபாலகங்கள் அனைத்தும் செயல்படாமல் மூடப்பட்டுள்ளன.

வவுனியா தபால் விநியோக சீர்குலைவு பற்றி அரச அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

(தி)

# பாடசாலைகளின் நெருக்கடிகள்; அதிகாரிகள், அதிபா கூட்டம்

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 1991ஆம் ஆண்டுக்கான திட்டங்களை வகுத்தல், பெப்ரவரி மாதமளவில் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கடந்த காலத்தில் வைக்கப்படாத பரீட்சைகளை வைத்தல் போன்றவிடயங்கள் உட்பட தேசிய பாடசாலைகளின் நிதிப் பிரச்சினை போன்ற விடயங்கள் பற்றி நேற்று முன்தினம்காலைபத்து மணியளவில் யாழ். கல்வித் திணைக்களத்தில் கோட்டக் கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் ஆகியோர் உட்பட கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கிடையிலான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் உயர்தர, சாதாரணதர பரீட்சைகள் நடத்துவதற்கு முன்னோடியாக 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை, சங்கீத செய்முறைப் பரீட்சைஎன்பவற்றை பெற்றோர்கள் நலன் விரும்பிகள் ஆசிரியரின் உடன்பாட்டைப் பெற்று நடாத்துதல் இது விடயத்தில் வடகிழக்கு மாகாணங்களில் பரீட்சை வைக்கக் கூடிய நிலைமை பற்றியும் ஆலோசிக்கப்படும். தேசிய பாடசாலைகள் நிதியைப்பெற்றோர்களிடம் இருந்து அன்பளிப்புப்பணமாக அறவிடலாம் இந்த நிதிக்கு உடனடியாகப் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும் என்பது போன்ற பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# ஜெனிவா பேச்சு தோல்வி; ஐ. நா. செயலாளர் முயற்சி

(ஜெனிவா)

வளைகுடா குறித்த ஜெனிவாப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை அடுத்து புதிய சமரச முயற்சியொன்றில் ஐ. நா. சபை தலைமைச்செயலாளர் பெரஸ்டி குயீவர் இறங்கியுள்ளார்.

இதன்படி இவர் வாஷிங்டனில் இருந்து வளைகுடாப் பகுதிக்கு நேற்றுச் சென்றுள்ளார். அடுத்தபடியாக நாளை சனிக்கிழமை பாக்தாத்திற்குச் சென்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைனையும் சந்திக்கவுள்ளார்.

ஜெனிவாவில் ஈராக்கிய, அமெரிக்க வெளியுறவு அமைச்சர்களிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை முறிவடைந்த சிறிது நேரத்தில் பெரஸ்டி குயீவரிடமிருந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதேபோலவே பிரான்சும் வளைகுடாவில் போர் ஒன்று ஏற்படாது இருக்க சகல முயற்சிகளையும் மேற்கொண்டுவருவதாக அறிவித்தது ஐரோப்பிய சமூக நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்த ஜோர்டானிய மன்னர் ஹூசைனும் இதனையே வலியுறுத்தி வருகின்றார்.

இதேநேரம் ஜெனிவாப் பேச்சுவார்த்தை முறிவடைந்ததற்குரிய காரணங்களை ஒவ்வொரு தலைவர்களும் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

**ஜேம்ஸ் பேகர்**

ஈராக்கின் விட்டுக்கொடுப்பற்ற நடவடிக்கைகளினாலேயே தாம் நடத்திய பேச்சுக்கள் முறிவடைந்தது என்றும், ஐ நா. சபையின் காலக்கெடு குறித்து எந்தவித பதிலும் தாரிக் அஸீஸிடமிருந்து வரவில்லை எனவும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

**தாரிக் அஸீஸ்**

மேற்காசியப் பிரச்சினைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தையில் கதைக்கப்படாததாலும் குறிப்பாக இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சினை பற்றி இந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றிருந்தால் குவைத்தைவிட்டு ஈராக் வெளியேறுவது குறித்து தாம் பரிசீலித்திருக்க முடியுமென ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டார்.

**ஜோர்ஜ் புஷ்**

ஜேம்ஸ் பேகரால் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கை ஓர் அங்குலம்கூட முன்னேறவில்லை என்றும், ஆகவே ஐ நா. சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுமாறு காங்கிரஸை ஜோர்ஜ்புஷ் வற்புறுத்திக்கேட்டுள்ளார்.

**சதாம் ஹூசைன்**

போருக்கான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டாலோ யானால் அல்லது ஈராக் தாக்கப்பட்டால் அமெரிக்கப் படைவீரர்கள் தங்களது ரத்த வெள்ளத்தில் மூழ்கவேண்டி இருக்கும் என சதாம் ஹூசைன் எச்சரித்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேல் போர் ஒன்று ஏற்பட்டால் ஈராக் தங்களைத் தாக்கும் எனக்கூறி பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளது. விமான நிலையமே முதலில் தாக்கப்படும்என்பதால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் வளைகுடாவில் உள்ள அனைத்து நாடுகளும், மத்திய கிழக்கு நாடுகளும், பாகிஸ்தானும் தமது நாடுகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வேளையிலும் ஜெனிவா பேச்சுவார்த்தை முறிவடைந்த நிலையிலும் ஐ நா. தலைமைச் செயலாளரின் வளைகுடா வருகை முக்கியத்துவம் பெறுவதாக இருக்கிறது.

**கண் பார்வை**

சாரக் கம்பி மூலமாகவோ, செயற்கைக்கோள் மூலமாகவோ சந்தாதாரர்களுக்கு கிடைக்கச் செய்யப்படும். ஜேர்மனியிலுள்ள நிறுவனம் ஒன்று இப் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

# புஷ்ஷின் கடிதத்தை ஏற்க தாரிக் அஸீஸ் மறுப்பு

(லண்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைனுக்கு வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ்பேகர் மூலம் அனுப்பிய இறுதி எச்சரிக்கைக் கடிதத்தை எடுத்துச் செல்ல ஈராக்கிய வெளியுறவுஅமைச்சர் தாரிக்அஸீஸ் ஜெனிவாவில் வைத்து நிராகரித்துவிட்டார்.

இக்கடிதம் ஒரு அரசுத் தலைவர் மற்றொரு அரசுத் தலைவருக்கு எழுதுவதைப் போன்ற மொழிநடையில் எழுதப்படவில்லையென தாரிக் அஸீஸ் தெரிவித்தார். இதனால் இக்கடிதத்தைத் தான் எடுத்துச்செல்லமுடியாது என மறுத்துள்ளார்.

எந்தவிதமான மேலதிகப் பேச்சுவார்த்தைக்கும் விரும்பும் எவரையும் பாக்தாத்துக்கு வரும்படி தெரிவித்த அவர், ஜெனிவாவில் நிருபர்களுக்கான செய்தியாளர்மாநாட்டை நடத்தினார். இச்செய்தியாளர் மாநாட்டில் குவைத் பற்றியோ, ஐ நா.வின் காலக்கெடு பற்றியோ எதனையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**43 பொலிஸார்**

நேற்று திரு.யோகரத்தினம் யோகி தலைமையில் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 43 சிறிலங்கா பொலிசாரையும் பார்வையிட்டு கலந்துரையாடினார்கள்.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பொலிசாரின் பெயர் விபரங்கள் வருமாறு:

ஏ. ஜே. முதியன்சலாகே (27 வயது தம்புள்ள), பி.எஸ். பண்டார (25 வயது உடத்துடுவ மீதலாவ), எஸ். டி. குணவர்தன (20 வயது களுத்துறை தெற்கு), ஏ. டி. பிரேமதாஸ (29 வயது தங்காலை), எஸ். டபிள்யு. யு ஆனந்தசமந்தலாக (22 வயது கேகால), பி டி. சிறிசந்தலல் (22 வயது கேகால), எச். பி. அபயவிக்கிரம (26 வயது வலஸ்மூல்ல), ஈ. எம். தஸநாயக்கா (26 வயது தெல்தெனிய), எம். டபிள்யு. பிரியந்த (22 வயது வெலிகம), எச். எம். பியரத்ன (22வயது கல்முவ), டபிள்யு டி தர்மசிறி (25 வயது பெபிலயாவெல), ஈ எம். சிசிறசேன ரத்தின (28 வயது கெக்கல கண்டி), எச். டபிள்யு வாமரத்தின (54 வயது அவிசாவெல), எஸ். எம். எட்வேட் பிரேமரத்ன (36 வயது கல்கமுவ), கே. ஏ ரஞ்சித் (26 வயது மொறபபிட்டிய), ஆர். எம். அனுராகந்த (23 வயது பொத்துவில்), டி. எம். சுனில் (23 வயது குலன்னுகே), ஓ. டபிள்யு. தசநாயக்கா (23 வயது கம்பளை), ஏ. எம். லொகுபண்டா (41 வயது கிங்குராகொட), டபிள்யு எம். விஜயகோன் பண்டார (24 வயது உடபுசல்லாவ), வி. ஆர் ஜீவகரத்தின (20வயது திருக்கோணமலை), ஈ வி. எம். திலகரத்தினா பண்டா (34 வயது தெதெனியா), கே. பி. லால் குணசேகர (23வயது உரபொல), என் டி. எஸ். கிறிஸ்தோபர் பெரேரா (37 வயது மாத்தளை), பி. என். வீரவர்த்தனா (22 வயது அம்பாறை), டி எச். தர்மவர்த்தனா (21 வயது அக்கரைப்பற்று) பி எம் என். சுமன்சிறி (19 வயது லகுல), ஆர் எம். சுருணரத்தின (23

# மரண அறிவித்தல்

## திரு. ஆசைப்பிள்ளை சந்திரநாதன்

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் உதவி வேலைப் பரிசோதகராகவும் ஈழநாதம் அரியாலை நிருபராகவும் கடமையாற்றிய திரு. ஆசைப்பிள்ளை சந்திரநாதன் 09-01-1991 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் திரு ஆசைப்பிள்ளை (ஓய்வூதியர், யாழ். மாநகரசபை) தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், திரு ஆ. ஜெகநாதன் (தொ. நு. உ. பனை அபிவிருத்தி சபை, யாழ்ப்பாணம்), ஆ. ஜீவநாதன் (பொது சுகாதார பரிசோதகர், யாழ் மாநகரசபை), ஆ. இரகுநாதன் (கணக்காளர், உள்ளூராட்சித் திணைக்களம், வட. கிழ. மாகாணசபை, திருக்கோணமலை), ஆ. நேமிநாதன் (தொ. நு. உ. வீடமைப்பு நீர்ப்பாசன அமைச்சு, வட கிழ மாகாணசபை. திருக்கோணமலை), திருமதி ஜேஸ் அலெக்நேசன், மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு ஜே. அ ஜீவானந்தம் (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு), திருமதி வினிதா தேவகுணமலர் ஜெகநாதன், திருமதி டைனேஸ்வரி. ஜீவநாதன் ஆகியோரின் மைத்துனரும், ஜீ. நிரோஜன், ஜீ. சோபின்ஜா ஆகியோரின் சித்தப்பாவும், ஆ. சாமுவேல் தேவகுமாரனின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10 - 01 - 1991 அன்று கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: ஆ ஜீவநாதன்

50/3, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(R/1022)

# கிழக்கில் கொல்லப்பட்ட பல்கலை. மாணவருக்கு அஞ்சலி

(மட்டக்களப்பு)

தென்தமிழீழப் பகுதியின் சிறிலங்கா இராணுவத்தினரின் குரூரமான செயற்பாடுகளால் யாழ். பல்கலைக்கழக மாணவர்களான இருபாகரன், (4ஆம்வருடம், முகாமைத்துவம்) தயாளன். (3ஆம்வருடம், கலைத்துறை) ய. ராஜசேகர், (2ஆம் வருடம், கலைத்துறை) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அஞ்சலி செலுத்தி மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

**மீண்டும்**

தலைமையகத்தில் இது குறித்து ஆலோசனை நடத்தியது. இந்தக் கூட்டத்தை மக்கள் கட்சித் தலைவர் ஒஸிஆயய குணசேகரா கூட்டியிருந்தார்.

**பாதுகாப்புச்**

வுகளுக்கென வருடமொன்றுக்கு 8 கோடி ரூபா செலவாகிறதாம். பாதுகாப்பு ஆளணியினரின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதால் அரசாங்கத்துக்குவருடம் ரூபா 4 கோடிதான் செலவு ஏற்படும் என அந்தச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

**மேலதிக**

உரிமையாளர் கேட்கிறார்கள்.

மேலதிக லொறிக் கூலிப் பணத்துக்கான அனுமதியைப் பெற யாழ். கல்வித்திணைக்களக் கணக்காளர் கல்வியமைச்சை நாடியுள்ளார். மேலதிகக் கூலிக்கான அங்கீகாரத்தை கல்வியமைச்சின் பிரதம கணக்காளர் வழங்காதுவிட்டால் இலவச பாடநூல்கள் யாழ்ப்பாணம் வந்தடையக் காலதாமதமாகலாம்.

**இலங்கைத்தமிழர்**

கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய கருணாநிதி மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரிலேயே இலங்கைப் போராளிகள் தனித்தனி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியப்பிரதமர் சந்திரசேகர் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதித்த குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார். அதாவது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அசாம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக்கூறும் தகவல் பொய் என்றும் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியும், அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் வேண்டுமென்றே இந்தப் பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

**இராமிய**

பட்ட பணத்தைக் கொண்டு அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வது முடியாத காரியம் என்று செயலக ஓய்வூதியப் பகுதியினர் தெரிவித்தனர்.

எனினும் ஒரு சில கிராமிய வங்கிகளினால் ஓய்வூதியத்தில் ஒரு பகுதி பணம் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும் சில ஓய்வூதியக்காரர்கள் கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத்திலும் இலங்கை வங்கியிலும் தமது ஓய்வூதியப்பணத்தைப்பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் மேற்படி பத்து மில்லியன் பணத்தைக் கொண்டு ஒரு மாதத்திற்குரிய கொடுப்பனவுகளை வழங்க முடியும் என கிராமிய வங்கி அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**ஆறுமாதகால**

ளது.

இதேவேளை வீடுகள் பல சேதமாக்கப்பட்டுள்ளன. மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதோடு, ஆதனங்களும் சேதமாகியுள்ளன. இதன் விபரங்கள் பிரஜைகள் குழுவால் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அவை வருமாறு: இடம்பெயர்ந்தோர்-1,200,000 கொல்லப்பட்டவர்கள் அல்லது காணாமற் போனவர்கள் 6,000 கைதாகியவர்கள். 2000 அங்கவீனமடைந்தவர்கள் 3,000 மனவதிர்ச்சியுற்றவர்கள்-200,000, சேதமாக்கப்பட்ட குடியிருப்புகள்-50 000 கோவில்தலங்கள்-200 பள்ளிக்கூடங்கள், வியாபார நிலையங்கள், பொதுக்கட்டடங்கள் 20,000. இத்துடன் வேளாண்மை நிலங்கள் 75 வீதம் சாகுபடி செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ளன என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வயது வீரகொட, எஸ். ஏ விஜேபண்டாரா (22 வயது பனானியா). ஜே எம். ஆர். ஜெயவர்த்தனா (24 வயது திருக்கோணமலை), பி. திலகரத்தினா (23 வயது அரநாயக்கா,) எஸ். சுது நிலாமி சரத் (19 வயது லமுகல்ல), எஸ். ஈ. அத்துக்கொறள (21 வயதுராஜகிரிய), ஏ. ஏ. நிமல் அரப்பற்று (22 வயது பொத்துகர), ஆர். ஈ. உபாலிநிசங்க (20 வயது வருகன்), வி. தர்மபாலா 20 வயது வலஸ்முல்ல), டபிள்யு எம். கருணாநாயக்க (31 வயது நிக்கரவெட்டிய), கே. ஜெயதிலக (29 வயது கெக்கிராவ), எம். எம். கே. ராஜரத்தினா (21 வயது திருக்கோணமலை), யு. அமரசிங்க (21 வயது மொரப்பிட்டிய), எச். டி. சந்திரசிறி (26 வயது குளியாப்பிட்டி) எஸ். சமரசிங்கா (29 வயது அக்குரஸ்ஸ) ஆர். எம். நாயாணந்த (27 வயது பீரிகம)

(செ. த. மை)

**வழங்கப்பட**

செய்யப்பட்டதாகவும் 6150 ஆயுதங்கள் கொடுக்கப்பட்டதற்கு சான்றுகள் இருப்பதாகவும் தெரிவித்தது.

இந்த ஆயுதங்களில் 2150 மாத்திரமே அரசாங்கத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மிகுதி 4000 ஆயுதங்களையும் திருப்பி ஒப்படைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

**மத்திய அரசுடன்**

திராவிட முன்னேற்றக் கழகமும் கொண்டு வந்த முன்னறிவிப்பு இல்லாத விவாதத்துக்குப் பிரதமர் பதிலளித்தார். தமிழகம் இப்போது ஏ. கே 47 ரகத் துப்பாக்கிகளுக்கும் விடுதலைப் புலிகள் நடமாட்டத்துக்கும், நாடெங்கிலுமுள்ள பயங்கரவாதிகள் கால் ஊன்றுவதற்கும் ஓர் இடமாக மாறிவிட்டது என்றார்.

விடுதலைப் புலிகள் நடமாட்டம் தொடர்பாக தான் தமிழகஅரசை மிரட்டவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்திரா காங்கிரஸும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் நாடாளுமன்றத்தில் கருணாநிதி அரசாங்கத்தைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றார்கள். இதனைப் பாரதிய ஜனதாக் கட்சியும் ஆதரித்தது. ஏனைய கட்சிகள் இதனை எதிர்த்தன. இதனால் அவையில் சிறிது நேரம் அமளி நிலவியது.

திரு. கருணாநிதி இப்போது விடுக்கும் அறிக்கைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும், தான் அவரைச் சந்தித்தபோது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். ஆனால் இப்போது கட்டாயப்படுத்தப்படுவதாக கூறுகின்றார். இது நல்லதல்ல என்றார் பிரதமர் சந்திரசேகர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆ இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.